வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

நாள்: 07.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

இந்தியாவின் வளர்ச்சியை எந்த சக்தியாலும் தடுக்க இயலாது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை தேர்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 3 ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் ஆயிரத்து 702 ரயில் நிலையங்களில் ஒரு பொருள்-ஒரு ரயில் நிலையம் திட்டம் செயல்பாட்டில் உள்ளதாக ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநராக திரு. கைலாஷ்நாதன் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கைக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற ---- ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

--------------------------------

*தன்கர்-கைத்தறி 1 (12)*

இந்தியாவின் வளர்ச்சியை எந்த சக்தியாலும் தடுக்க இயலாது என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார். தேசிய கைத்தறி தினத்தையொட்டி இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். இந்தியா அடுத்து 2 ஆண்டுகளுக்குள் 3ஆவது பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். கைத்தறிப் பொருட்களின் பயன்பாட்டை அதிகரிக்க பொதுமக்கள் உதவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இதில், கூட்டுறவுத் துறையும் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில், தேசிய கைத்தறி நெசவாளர் விருதுகளையும், திரு. ஜெக்தீப் தன்கர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேசிய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங், ஊரகப்பகுதிகளில் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் கைத்திறத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

சர்வதேச அளவிலான கைத்தறி வர்த்தகத்தில் நம் நாட்டின் பங்கு 90 சதவிகிதமாக உள்ளது என்றும் அமைச்சர் கூறினார். இந்நாளையொட்டி, தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர்

திரு. முருகன் விடுத்துள்ள செய்தியில், சுதேசி இயக்கத்திற்க பெரிய அளவில் பாலமாக அமைந்த கைத்தறி நெசவாளர்களை போற்றுகின்ற விதமாகவும், ஊக்குவிக்கும்

*தன்கர்-கைத்தறி* 2 (5)

வகையிலும், தேசிய கைத்தறி தினம் கொண்டாடப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தொழில்நுட்பம் பெரிதும; வளர்ச்சியடைந்த இந்த காலத்திலும், கைத்தறி நெசவில் ஈடுபட்டுளள் அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

-------------------------------

*மாநிலங்களவை தேர்தல் (13)*

அஸ்ஸாம், பீகார், ஹரியானா, மத்தியப்பிரதேசம்,மஹாராஷ்ட்ரா, ராஜஸ்தான், திரிபுரா, தெலங்கானா, ஒடிசா மாநிலங்களிலிருந்து மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 3ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் வரும் 14ஆம் தேதி தொடங்குகிறது. வேட்புமனுக்களை தாக்கல் செய்ய 21ஆம்

தேதி கடைசி நாளாகும். அதற்கு மறுநாள் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்.

அஸ்ஸாம், மத்திய பிரதேசம், மஹாராஷ்ட்ரா மற்றும் திரிபுராவை பொறுத்தவரை வேட்புமனுக்களை விலக்கிக் கொள்வதற்கு வரும் 26ஆம் தேதி கடைசி நாளாகும்.

பீகார், ஹரியானா, ராஜஸ்தான், தெலங்கானா மற்றும் ஒடிசாவை பொறுத்தவரை இது 27ஆம் தேதியாக இருக்கும் என்றும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

போட்டி இருக்கும் பட்சத்தில் தேர்தல் நடைபெறும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

-------------------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (6)*

நாடு முழுவதும் ஆயிரத்து 702 ரயில் நிலையங்களில் ஒரு பொருள் – ஒரு ரயில் நிலையம் திட்டம் செயல்பாட்டில் உள்ளதாக, ரயில்வேத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். மக்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் கீழ் 79 கோடி ரூபாய் அளவிற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக கூறினார். இதன்மூலம் 67 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

-------------------------------

*தாகூர் நினைவு தினம்(13)*

புகழ் பெற்ற கவிஞர், எழுத்தாளர், கல்வியாளர் மற்றும் சமூக சீர்திருத்தவாதியாக விளங்கிய ரவீந்திரநாத் தாகூரின் நினைவு தினமான இன்று நாடு அவருக்கு அஞ்சலி செலுத்துகிறது. நமது தேசிய கீதத்தை இயற்றியவரும், கீதாஞ்சலி படைப்புக்காக நோபல் பரிசு பெற்றவருமான தாகூருக்கு, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அஞ்சலி செலுத்தி உள்ளார். அவர் தமது சமூக ஊடகப் பதிவில், நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்திற்கு புத்துயிர் அளித்தவர் தாகூர் என்றும், சமூக மாற்றத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்த பாடுபட்டவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு. கிஷண் ரெட்டி, இசை, கலை, இலக்கியம் உள்ளிட்ட துறைகளில் தாகூரின் பங்கு மகத்தானது என்று சமூக ஊடகப் பதிவில் வெளியிட்டுள்ள நினைவு தின செய்தியில் குறிப்பிட்டுள்ளார். நுகர்வோர் விவகாரங்கள் மற்றும் உணவு பொது வினியோகத்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி உள்ளிட்டோரும் தாகூருக்கு அஞ்சலி செலுத்தி உள்ளனர்.

-------------------------------

முர்மு-ஒலிம்பிக் (18)

பாரீஸ் ஒலிம்பிக்கில் மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத்தின் முயற்சிகளை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாராட்டியுள்ளார். அவரது சாதனைகள், ஒவ்வொரு இந்தியரையும் சிலிர்ப்பூட்டும் வகையிலும், நாட்டை பெருமிதம் கொள்ளும் வகையிலும் அமைந்ததாகவும் அவர் தமது ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். தகுதி நீக்கம் குறித்த தனது ஏமாற்றத்தை நாடு பகிர்ந்து கொண்டாலும், இந்தியர்கள் அனைவரின் இதயங்களிலும் அவர் ஒரு சாம்பியனாகவே இருக்கிறார் என்றும், போகத், எதிர்காலத்தில் பல வெற்றி வாகைகளை சூட வேண்டும் என்றும், அவரை வாழ்த்தியுள்ளார்.

பாரீஸ் ஒலிம்பிக் மகளிர் மல்யுத்த இறுதிப் போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்ட வீராங்கனை வினேஷ் போகத்துக்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆறுதல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், வினேஷ் போகத், சேம்பியன்களில் ஒரு சேம்பியன் என்றும், இந்தியருக்கு உத்வேகம் அளிக்கும் இந்தியாவின் பெருமை அவர் என்றும், கூறியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் இருந்து வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதற்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வருத்தம் தெரிவித்துள்ளார். மில்லியன் கணக்கான இந்தியர்களின் நம்பிக்கையை இச்செயல் உடைக்கும் வகையில் உள்ளதாக அவர் தமது ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

--------------------------------

*தன்கர்-ராஜஸ்தான் (6)*

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், 2 நாள் பயணமாக வரும் 9ஆம் தேதி, ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூர் செல்கிறார். தமது பயணத்தின் முதல் நாளில், ஜோத்பூரில் நடைபெறும் மாநில அளவிலான நீதித்துறை அதிகாரிகள் மாநாட்டில், தலைமை விருந்தினராக பங்கேற்கிறார். 2ஆவது நாள்,

ராஜஸ்தான் உயர்நீதிமன்றத்தின் பவள விழா கொண்டாட்டத்தில் பங்கேற்று உரையாற்ற உள்ளார்.

--------------------------------

*ஆளுநர் பதவியேற்பு (6)*

புதுச்சேரியின் புதிய துணை நிலை ஆளுநராக திரு. கே கைலாஷ்நாதன் இன்று பதவியேற்றுக் கொண்டார். ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி திரு. கிருஷ்ணகுமார், அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அமைச்சர்கள், மற்றும் உயர் அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

--------------------------------

*சட்டமன்றம் (10)*

புதுச்சேரி சட்டமன்றத்தில், பட்ஜெட் மீதான பொது விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெற்றது. அவையில் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. வைத்தியநாதன், புதுச்சேரியில் குற்றங்களை தடுக்க, ரெஸ்டோ பார்களின் நேரத்தை குறைக்க வேண்டும் என்றும், புதுச்சேரிக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும், உள்ளாட்சித் தேர்தலை

விரைவில் நடத்த ஆவண செய்ய வேண்டும், மின்துறையை தனியார் மயமாக்கக் கூடாது என்று கோரிக்கைகளை முன் வைத்தார். எதிர்கட்சித் தலைவர் சிவா மற்றும் திமுக உறுப்பினர்கள் திரு. நாஜிம், திரு. அனிபால் கென்னடி உள்ளிட்ட பலரும் விவாதங்களில் பங்கேற்று பேசினர். பின்னர் துணை நிலை ஆளுநரின் பதவியேற்பு விழாவை தொடர்ந்து மதியம் 3.30 மணி வரை நடைபெற்ற அவையின் அலுவல்கள் நாளைக் காலை 9.30 வரை ஒத்தி வைக்கப்பட்டன.

-------------------------------

*கருணாநிதி-தமிழகம்* (6)

திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான மு. கருணாநிதியின் 6ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதையொட்டி, சென்னை மெரீனா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி பிரமுகர்கள், அமைதிப் பேரணியாக சென்று, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

-------------------------------

*கலைஞர்-புதுச்சேரி (7)*

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக முன்னாள் தலைவருமான மு. கருணாநிதியின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. புதுச்சேரி அரசு சார்பில், சட்டமன்ற வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரின் உருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அமைச்சர்கள், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ராஜவேலு மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

--------------------------------

*யுஜிசி (7)*

கடந்த 5 ஆண்டுகளில், 149 தனியார் பல்கலைக்கழகங்களுக்கு, பல்கலைக்கழக மானியக் குழு அனுமதி வழங்கியுள்ளது. நாடு முழுவதும் உள்ள பல்வேறு கல்லூரிகளில் இருந்து, 806 முன் மொழிவுகள் மற்றும் விண்ணப்பங்களை யுஜிசி பெற்றுள்ளதாகவும், இவற்றில், 613 முன் மொழிவுகளுக்கு யுஜிசி ஒப்புதல் அளித்துள்ளதாகவும், மாநிலங்களவையில், எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில், மத்திய கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்தா மஜூம்தார் தெரிவித்தார்.

-------------------------------

குடிமைப்பணி (10)

இந்தோ-பசிபிக் ஒத்துழைப்பு கூட்டமைப்பு மற்றும இந்திய பெருங்கடல் நாடுகளைச் சேர்ந்த குடிமைப்பணி ஊழியர்களுக்கான கொள்கை மற்றும் ஆளுமை குறித்த முதலாவது மேம்பட்ட தலைமைத்துவ வளர்ச்சிப் பயிற்சித் திட்டம், முசோரியில் இன்று தொடங்கியது. சிஷெல்ஸ், சோமாலியா, தென்ஆப்ரிக்கா, இந்தோனேஷியா உள்ளிட்ட 11 நாடுகளைச் சேர்ந்த 40 புகழ்பெற்ற பங்கேற்பாளர்களுடன் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஆகஸ்ட் 5ஆம் தேதி துவங்கி 16ஆம் தேதி வரை நடைபெறும் இந்நிகழ்ச்சியில், குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச ஆளுமை, என்ற இந்தியாவின் கொள்கை குறித்தும், செயலக சீர்திருத்தங்கள், நிர்வாகத்தை தரப்படுத்துதல், இ-சேவைகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவை குறித்தும், இந்நிகழ்ச்சியின் போது விவாதிக்கப்பட்டது.

-------------------------------

*ஒலிம்பிக் (7)*

பாரீஸ் ஒலிம்பிக்கில், அனைவரும் ஆர்வமுடன் எதிர்பார்க்கும் இந்திய தடகள வீரர் அவினாஷ் சேபிள் பங்கேற்கும், ஆடவர் 3

ஆயிரம் மீட்டர் ஸ்டீபப்பில் சேஸ் இறுதிப் போட்டி, நாளை நடைபெற உள்ளது.

இதனிடையே பாரீஸ் ஒலிம்பிக் துப்பாக்கி சுடும் போட்டியில் 2 பதக்கங்களை வென்று இந்தியா திரும்பி உள்ள மனுபாக்கருக்கு, புதுடெல்லி விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சக அதிகாரிகள், மற்றும், ரசிகர்கள் அவரை வரவேற்றனர்.

--------------------------------

*கிரிக்கெட் (8)*

இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையே, கொழும்பு பிரேமதாசா விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறும் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் 3ஆவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், டாஸ் வென்ற இலங்கை அணி, பேட்டிங்கை தேர்வு செய்து விளையாடி வருகிறது. சற்று முன்வரை, ----- ஓவரில், ----- விக்கெட் இழப்பிற்கு, ----- ரன் எடுத்துள்ளது.

இத்தொடரின் முதல் போட்டி சமனில் முடிவடைந்ததை தொடர்ந்து, 2ஆவது போட்டியில் இலங்கை அணி, 32 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 1க்கு பூஜ்யம் என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இன்றைய போட்டியில் இந்தியா வெற்றி பெற்றால், தொடரை சமன் மட்டுமே முடியும்.

-------------------------------

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவின் வளர்ச்சியை எந்த சக்தியாலும் தடுக்க இயலாது என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

மாநிலங்களவைக்கு 12 உறுப்பினர்களை தேர்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 3 ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் ஆயிரத்து 702 ரயில் நிலையங்களில் ஒரு பொருள்-ஒரு ரயில் நிலையம் திட்டம் செயல்பாட்டில் உள்ளதாக ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநராக திரு. கைலாஷ்நாதன் இன்று பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கைக்கு எதிரான 3ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற ---- ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.